## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| **M.C.O.P. No. 58/2018** | **Date :** 03.03.2023 | **PW2** |
|---|---|---|
| Name: சத்தியராஜ் | S/o. **சாமியப்பன்** | |
| Evidence Recorded Time: 12.46 P.M. to 01.00 P.M. | | |

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மனுதாரர்கள் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் உறவினர்கள் இல்லை, தெரிந்த நபர்கள். மனுதாரர்கள் என்ன சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் தெரியாது. நான் MBC வகுப்வை சேர்ந்தவர். விபத்தின் போது ராமன் நகர் கிழக்கு பகுதியில் உள்ள பஸ்நிறுத்ததில் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். கிழக்கு பகுதி மேடான பகுதி என்றால் சரிதான். ராமன் நகர் இருபகுதியிலும் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக அந்த பகுதியில் மக்கள் நெருக்கம் அதிகமாக காணப்படும் என்றால் சரிதான். அந்த பகுதியில் வாகனம் அதிவேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இருபகுதியிலும் போக்குவரத்து வாகனங்கள் வந்த சென்று கொண்டிருக்கிறது என்றால் சரிதான். விபத்து நடைபெற்றபோது நான் சிவில் வேலை செய்வதற்காக ராமன் நகர் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தேன். எனது சொந்த ஊர் வீரனூர் ஆகும். வீரனூர் ராமன் நகர் வடபகுதியில் 4 கி.மீ துாரத்தில் கடைசியாக உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண பிரமாண பத்திரத்தில் டிராக்டர் மீது மோதி இருசக்கர வாகனம் துாக்கி வீசப்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சின்னசாமி போலீசில் என்ன புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சின்னசாமியிடம் விபத்தை நேரில் பார்த்தாக சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை, குற்றவியல் நீதிமன்றத்தில் தான் விசாரிக்கப்பட்டேன். மனுதாரர் சின்னசாமி புகார் கொடுத்த பிறகு என்னை விசாரித்தார்களா என்றால் காவல் நிலையத்திற்கு வரசொல்லி விசாரணை செய்தார்கள். நான், சின்னசாமி உடன் சென்று விசாரணை செய்யப்பட்டோம் என்றால்

என்னை மட்டும் தான் அழைத்தார்கள் நான் மட்டும் சென்று வந்தேன். நான் நின்று கொண்டிருந்த பஸ் நிறுத்தற்கும் விபத்து நடைபெற்ற இடத்திற்கும் சுமார் 100 அடி தூரம் இருக்கும் என்றால் இல்லை மிக அருகில்தான் நின்று கொண்டிருந்தேன். விபத்து ஏற்பட்ட காலத்தில் சித்தனூரை சேர்ந்த டிராக்டர் ஓட்டுநர் ராமன் நகர் தெற்கு பகுதியில் உள்ள தார் ரோட்டிலிருந்து வடக்கு பக்கம் திரும்பி மேற்கு நோக்கி செல்லும் போது மண் ரோட்டில் நின்று கொண்டிருந்த கார் வலது புறமாக மெயின் ரோட்டிற்கு திரும்பும் போது டிராக்டர் ஓட்டுநர் பிரேக் போட்டு நிறுத்தியதால் பின்னால் வந்த மனுதாரர் மகன் அவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை கட்டுப்படுத்த முடியால் டிராக்டர் மீது மோதி கீழே விழுந்த போது பின்னால் வந்த லாரி இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக சின்னுசாமி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்தை சுமார் 100 பேர் பார்த்திருப்பார்கள் என்றால் சரிதான். என்னை மட்டும் தான் காவல் நிலையத்தில் இருந்து விசாரணை செய்தார்கள் என்றால் அந்த இடத்தில் நான் இருந்ததால் என்னை விசாரணை செய்தார்கள். முன்னால் சென்ற கார், அதன் பின்னால் வந்த டிராக்டர், பின் வந்த இருசக்கர வாகனம் ஆகிய மூவரும் சாலை விதிகளை கடைபிடித்து இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், அப்படி நான் பார்த்திருந்தால் மனுதாரர் புகாரில் சொல்லியது போல சாட்சியம் அளித்திருப்பேன் என்றாலும் அந்த காரணத்தினால்தான மனுதாரர் புகாரில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஓம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.